முருகப்பெருமான் துணை

**மகான் கழறிற்றறிவார் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.10.2023,** வியாழக்கிழமை

1. வள்ளலாய் வாழும் ஞானியே
வையகம் காத்தருள வேண்டி
இல்லாமை போக்கி உலகோர்க்கு
எல்லா வரமும் தந்தருள வந்த தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தருமனே உன் பெருமை கூறி
அவனியில் சோபகிருது தரிவை திங்கள்
அறிவிக்க மூவாறு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 18 ம் நாள், 05.10.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் கழறிற்றறிவார் நாயனாரும்
பாரதம் எங்கும் மக்கள் பண்புற
பரிபக்குவ நிலை பெற உரைப்பேன்
4. உரைக்கவே கலி இடர்களால்
உண்மை நிலை மறந்து
கறைபட வாழும் மனிதர்கள்
கட்டாயம் மாயை என்பதை உணர்ந்து
5. உணர்ந்து தெளிந்து மீண்டு
உண்மை நெறி வள்ளல் நெறி
ஞானமாக ஏற்று வருவதற்காக
நம்பிக்கை யூட்டி அருளுகின்ற
6. அருளுகின்ற அரங்கன் நெறி
அறம் மிகுந்த சன்மார்க்க நெறி
வரமென மக்கள் ஏற்று
வணங்கி சரணாகதி கொண்டிட

7. கொண்டிட கலித் துன்பங்கள்
குறைகள் அனைத்தும் விலகி
உண்டாகும் ஞான வாழ்வு
உண்மை வழி பின்பற்றித் தேறும்
8. தேறும் நற்பண்புகள் கூடி
தேசிகன் தேர்வு செய்யும்
ஆறுமுகனார் ஆசி கொண்ட
ஆற்றல் மிக்க ஞானவான்களாக
9. ஆகவே தேறி வருவதுடன்
அகிலம் மாற்றும் வண்ணம்
மகா சக்திகளாக ஞானிகளாக
மகான் அரங்கன் வழிவழியாக
10. ஆகவே கலியில் ஞானிகள் படை
அளவிலாப் பெருகிச் சிறந்து
செகமே ஞானவாழ்வு கண்ட
சிறந்த லோகமாக மாறும்
11. மாறும் வள்ளல் ஆட்சியாக
மனிதர்கள் ஆட்சி முடிவுற்று
ஆறுமுகன் ஆசிதனை கொண்ட
அழிவிலா ஞான ஆட்சியாக மாறும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—